

# கட்டாயப் பாடசாலை வருகை

## பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கான தகவல்கள்

உங்களுடைய பிள்ளைக்கான கல்வி என்பது மிகவும் முக்கியமானது, அத்துடன் படிப்பில் மிகச் சிறந்த சாதனைகளைப் புரியவும், அவரது வாழ்க்கைத்தொழில் மற்றும் வாழ்க்கைக்கான தெரிவுகளை விரிவுபடுத்திக்கொள்ளவும் பாடசாலைக்கு உங்களுடைய பிள்ளை தவறாமல் வந்துகொண்டிருக்க வேண்டியது முக்கியம். பிள்ளைகள் மற்றும் இளம் பிராயத்தினரது பாடசாலை வருகையை ஊக்குவித்து, அவர்களுக்கு ஆதரவுதவியாக இருப்பதற்காக NSW பொதுப் பாடசாலைகள் பெற்றோர்களுடன் இணைவாய்ப் பணியாற்றிவருகின்றன. உங்களுடைய பிள்ளை தினமும் பாடசாலைக்கு வரும் பொழுது கற்றல் இன்னும் எளிதானதாகிறது, அத்துடன் மற்ற பிள்ளைகளுடன் உங்களுடைய பிள்ளை நட்புறவுகளை ஏற்படுத்திக்கொள்வதோடு அவற்றைப் பேணி வருவார்.

### எனக்கிருக்கும் சட்டரீதியான பொறுப்புகள் யாவை?

ஆறு வருடங்கள் வயதிற்கும், பாடசாலையை விட்டு அகல்வதற்கானக் குறைந்தபட்ச வயதான 17 வருடங்கள் வயதிற்கும் இடைப்பட்ட வயதிலுள்ள அனைத்துப் பிள்ளைகளுக்கும் நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் கல்வி கட்டாயமானதாகும். கட்டாயக் கல்வி வயதிலுள்ள தமது பிள்ளைகள் பாடசாலையில் பெயர் சேர்க்கப்பட்டிருப்பதையும், பாடசாலைக்கு அவர்கள் தவறாமல் வருவதையும், உறுதிப்படுத்தவேண்டும் என்ற தேவைப்பாட்டினை 'கல்விச் சட்டம் 1990' (Education Act 1990) பெற்றோர்களுக்கு ஏற்படுத்துகிறது. அல்லது அவர்கள் வீட்டிலிருந்து படிப்பதாயின், NSW 'கல்வித் தராதரங்கள் ஆணைய'(NSW Education Standards Authority)த்தில் அவர்கள் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டுமென்று அச்சட்டம் வேண்டுகிறது.

பாடசாலையில் பெயர் சேர்க்கப்பட்டது முதல், மாணவ-மாணவியருக்காகப் பாடசாலை திறந்திருக்கும் ஒவ்வொரு நாளும் பாடசாலைக்கு வரவேண்டுமென பிள்ளைகள் வேண்டப்படுகின்றனர்.

### உரிய நேரத்தில் வந்துசேரவேண்டியதன் முக்கியத்துவம்

உரிய நேரத்தில் பாடசாலைக்கு வந்துசேர்வது:

- நாளின் ஆரம்பத்தில் இடம்பெறும் முக்கியமான கல்வி நடவடிக்கைகளை மாணவ-மாணவியர் தவறவிடாமல் இருப்பதை உறுதிப்படுத்துகிறது
- நேரம் தவறாமை மற்றும் வழமையான அலுவல் முறை ஆகியவற்றின் முக்கியத்துவத்தினை மாணவ-மாணவியர் கற்றுக்கொள்ள உதவுகிறது
- வகுப்புகள் துவங்குவதற்கு முன்பாகவே அவர்களது நண்பர்களுக்கு முகமன் கூற மாணவ-மாணவியருக்கு நேரம் அளிக்கிறது
- வகுப்பறை இடையூறுகளைக் குறைக்கிறது.

கால தாமதமானால் 'பகுதி-நேர வருகை இன்மை' என்று அது பதிவு செய்யப்படும், அத்துடன் பெற்றோர்கள் இதற்கான விளக்கத்தை அளிக்கவேண்டியது கட்டாயமாகும்.

### என் பிள்ளையால் பாடசாலைக்கு வர இயலவில்லை என்றால் என்ன செய்வது?

சில வேளைகளில், பாடசாலைக்கு வராமல் இருப்பதற்கான தேவை உங்களுடைய பிள்ளைக்கு எழக்கூடும். மாணவ-மாணவியர் பாடசாலைக்கு வராமல் இருப்பதற்கான நியாயமான காரணங்களில் பின் வருவன உள்ளடங்கலாம்:

- சுகவீனமுற்றிருப்பது, அல்லது தொற்று நோய் ஒன்றிற்கு ஆளாகியிருப்பது
- தவிர்க்கவியலாத மருத்துவ சந்திப்புவேளை ஒன்றைக் கொண்டிருப்பது
- மதம் சம்பந்தப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட விடுமுறை ஒன்றிற்குச் செல்லவேண்டிய தேவை இருப்பது
- அசாதாரணமான, அல்லது அவசர குடும்பச் சூழல் ஒன்று, உதாரணமாக, இறுதிச்சடங்கு ஒன்றிற்குச் செல்லல்.

பாடசாலைக்கு உங்களுடைய பிள்ளை வராமலிருக்க நேரிட்டால், அதனைத் தொடர்ந்து, வராமைக்கான காரணத்தை வார்த்தை மூலமாகவோ, எழுத்து மூலமாகவோ 7 நாட்களுக்குள் நீங்கள் விளக்கிச் சொல்கிறீர்கள் என்பதை நீங்கள் உறுதிப்படுத்தவேண்டியது கட்டாயமாகும். இருப்பினும், 2 நாட்களுக்குள்ளாக உங்களிடமிருந்து விளக்கம் ஒன்றைப் பாடசாலை பெறவில்லை என்றால், ஏற்பட்ட 'வருகை இன்மை' பற்றி உங்களுடன் கலந்துபேசுவதற்காகப் பாடசாலை உங்களுடன் தொடர்புகொள்ளக்கூடும்.

பாடசாலைக்கு வராமலிருந்தது உங்களுடைய பிள்ளையின் நலனுக்காகவே என்று பாடசாலை அதிபர்கள் நம்பாவிட்டால், நீங்கள் கொடுக்கும் விளக்கத்தினை ஏற்க பாடசாலை அதிபர்கள் மறுக்கக்கூடும். இவ்வாறான தருணங்களில் 'வருகை இன்மை' நியாயமானதல்ல' என்று பதிவு செய்யப்படும். இத்தகைய நிகழ்வின்போது, அதிபர் அவர்களின் முடிவைப் பற்றி உங்களுடன் கலந்துரையாடுவார் மற்றும் அதற்கான காரணங்களைப் பற்றிப் பேசுவார்.

சுகவீனத்தின் காரணமாக அடிக்கடி அல்லது நீண்ட நாட்களுக்குப் பாடசாலைக்குப் பிள்ளை வர இயலவில்லை என்று பெற்றோர்கள் விளக்கம் அளிக்கும் தருணத்தில் மருத்துவச் சான்றிதழ்களோ, வேறு ஆவணங்களோ வேண்டுமெனப் பாடசாலை அதிபர்கள் கேட்கலாம். உங்களுடைய பிள்ளைக்கு ஆதரவுதவியாக இருப்பதற்காக மருத்துவ வல்லுநர்களுடைய ஒத்துழைப்புடன் சுகாதாரப் பராமரிப்புத் திட்டம் ஒன்றை உருவாக்க சிறப்பு மருத்துவர்களுடன் பேசுவதற்கான அனுமதியையும் பாடசாலை அதிபர்கள் நாடக்கூடும். இக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டால், 'வருகை தராமை' நியாயமற்றது என அதிபர் பதிவு செய்யக் கூடும்.

## பயணம்

பாடசாலை விடுமுறை நாட்களின் பொழுது பயணங்களை மேற்கொள்ளுமாறு குடும்பங்களை ஊக்குவிக்கிறோம். பாடசாலைப் பருவ நாட்களில் பயணம் செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டால், இதைப் பற்றி உங்களுடைய பிள்ளையின் பாடசாலை அதிபருடன் கலந்துபேசுங்கள். இதற்காக 'நீண்ட விடுப்பு விண்ணப்பம்' (Application for Extended Leave) ஒன்று பூர்த்தி செய்யப்பட வேண்டியிருக்கலாம். வருகைப் பதிவேட்டில் பயணம் சம்பந்தப்பட்ட வருகையின்மைகள் விடுப்பு (leave)களாகக் காண்பிக்கப்படும், ஆகவே குறிப்பிட்ட ஒரு வருடத்தில் உங்களுடைய பிள்ளை பாடசாலைக்கு வராத நாட்களின் மொத்த எண்ணிக்கையுடன் இது சேர்க்கப்படும்.

50 பாடசாலை நாட்களுக்கு மேற்பட்ட பயணக் காலங்களில் 'தொலைவழிக் கல்வி'(distance education)யில் சேர மாணவ-மாணவியர் சில சூழல்களில் தகுதி பெறக்கூடும். உங்களுடைய பிள்ளையின் பாடசாலை அதிபருடன் நீங்கள் இதைப் பற்றிக் கலந்துபேசவேண்டும்.

## என் பிள்ளை பாடசாலைக்குச் செல்ல மறுக்கிறார், நான் என்ன செய்வது?

இந்தப் பிரச்சினையைப் பற்றிக் கலந்துபேசுவதற்காகவும், உதவி நாடுவதற்காகவும் நீங்கள் பாடசாலை அதிபருடன் கூடிய விரைவில் தொடர்புகொள்ள வேண்டும். பிள்ளைகளது பாடசாலை வருகையை மேம்படுத்துவதற்காகப் பாடசாலையிலுள்ள கற்றல் மற்றும் ஆதரவுதவி அணியினருக்கு உங்களுடைய பிள்ளை பரிந்துரைக்கப்படலாம், அல்லது தகுந்த ஆதரவுதவி அமைப்புகளுடன் அவர் தொடர்புபடுத்தப்படலாம். 'பாடசாலை வருகை மேம்பாட்டுத் திட்டம்' (Attendance Improvement Plan) ஒன்றை உருவாக்குவதற்காக, 'வீட்டுக் கல்வி ஏற்பாட்டுத் திட்ட' (Home School Liaison Program)த்திடம் இருந்து மேலதிக உதவியைப் பாடசாலை அதிபர் நாடக்கூடும்.

## ஏற்றுக்கொள்ளத் தகாத வகையில் என் பிள்ளை தொடர்ந்து பாடசாலைக்கு வராமல் இருந்தால் என்ன ஆகக்கூடும்?

கட்டாயக் கல்வி வயதிலுள்ள பிள்ளைகள் விளக்கம் அளிக்கப்படாத, அல்லது நியாயப்படுத்த இயலாத வகையில் பாடசாலைக்கு மீண்டும் மீண்டும் வராமலிருக்கும் தருணங்களில் அடுத்த கட்ட நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டிய தேவை 'கல்வித் திணைக்கள'த்திற்கு ஏற்படலாம் என்பதை விளங்கிக்கொள்ள வேண்டியது முக்கியம்.

பின் வரும் நடவடிக்கைகளில் சில மேற்கொள்ளப்படலாம்:

- கல்வி சம்பந்தப்பட்ட கட்டாயக் கலந்துரையாடல்கள்

கல்வி சம்பந்தப்பட்ட கட்டாயக் கலந்துரையாடல் ஒன்றில் உங்களுடைய பிள்ளையுடன் கலந்துகொள்ளுமாறு நீங்கள் கேட்கப்படலாம். உங்களுடைய பிள்ளை தவறாமல் பாடசாலைக்குச் செல்ல ஏது செய்யும் விதத்தில் உங்களுடைய பிள்ளைக்குத் தேவைப்படக்கூடிய ஆதரவுதவிகளை அடையாளம் காண இந்தக் கலந்துரையாடல் உதவும். உங்களுடைய பிள்ளையின் பாடசாலை வருகைக்கு ஆதரவுதவி செய்வதற்காக ஏற்றுக்கொள்ளப்படும் திட்டம் (இதை 'பொறுப்பேற்புகள்' (Undertakings) என்று சொல்வர்) ஒன்றை உருவாக்குவதற்காகப் பாடசாலையும், பெற்றோர்களும், முகமைகளும் இணைவாகச் செயல்படுவார்கள்.

- 'குழந்தைகள் நீதிமன்ற'(Children's Court)த்திற்கு விண்ணப்பித்தல் – 'கட்டாயக் கல்வி உத்திரவு' (Compulsory Schooling Order)

உங்களுடைய பிள்ளையின் பாடசாலை வருகை தொடர்ந்து திருப்திகரமானதாக இல்லை என்றால், 'கட்டாயக் கல்வி உத்திரவு' (Compulsory Schooling Order) ஒன்றிற்காக 'குழந்தைகள் நீதிமன்ற'த்திற்குத் 'திணைக்களம்' விண்ணப்பிக்க வேண்டியிருக்கலாம். 'கட்டாயக் கல்விக் கலந்துரையாடல்' (Compulsory Schooling Conference) ஒன்றை ஏற்பாடு செய்யுமாறு 'குழந்தைகள் நீதிமன்ற' நடுவர் உத்திரவிடலாம்.

- உள்ளூர் நீதிமன்ற வழக்கு விசாரணை

பாடசாலையில் உங்களுடைய பிள்ளை முழுமையாகப் பங்குபற்றுவதற்குத் தடையாக உள்ள பிரச்சினைகளைக் கவனிக்க உங்களுடன் கூட்டாகச் செயல்படுவதில் பாடசாலையும் 'திணைக்கள' ஊழியர்களும் பற்றுறுதி கொண்டுள்ளனர். கட்டாயக் கல்வி உத்திரவு ஒன்று மீறப்படும் சூழல்களில், உள்ளூர் நீதிமன்றத்தில் பெற்றோர் ஒருவருக்கு எதிராக மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம். நீதிமன்ற நடவடிக்கையின் காரணமாக சமூக சேவை உத்திரவு ஒன்று அல்லது அபராதம் ஒன்று விதிக்கப்படலாம்.

## எந்த வயதில் என் பிள்ளை பாடசாலையை விட்டு அகலலாம்?

10-ஆம் ஆண்டு அல்லது அதற்குச் சமமான படிப்பை அனைத்து நியூ சவுத் வேல்ஸ் மாணவ-மாணவியரும் கட்டாயமாக முடித்திருக்கவேண்டும், ஆகவே அவர்களுக்கு 17 வயது ஆகும் வரை, படிப்பைப் பூர்த்தி செய்வதற்கான வளைந்துகொடுக்கும் தன்மையுள்ள பல வகைத் தெரிவுகள் மாணவ-மாணவியருக்காக உள்ளன.

## கூட்டாகச் செயல்பட்ல்

மணவ-மாணவியர் பாடசாலைக்குத் தவறாமல் வந்துகொண்டிருக்க உதவியாக இருப்பதற்கு மிக நல்ல வழி மாணவ-மாணவியருடனும் அவர்களது பெற்றோர்களுடனும் ஒத்துழைப்பாகச் செயலாற்றுவதே என்பதை 'NSW கல்வித் திணைக்களம்' அங்கீகரிக்கிறது.

உங்களுடைய பிள்ளையின் வாழ்க்கையில் அவருக்கு உள்ள வாய்ப்புகளை அவர் பயன்படுத்திக்கொள்வதில் அவருக்கு உதவியாக இருக்க உங்களுடன் கூட்டாகச் செயலாற்ற விழைகிறோம்.

## தொலைபேசி மொழிபெயர்த்துரைப்பாளர் சேவை

உங்களுக்கு இன்னும் தகவல்கள் தேவைப்பட்டால், தயவு செய்து பாடசாலையுடன் தொடர்புகொள்ளுங்கள். பாடசாலையுடன் தொடர்புகொள்ள உங்களுக்கு மொழிபெயர்த்துரைப்பாளர் உதவி தேவைப்பட்டால் தயவுசெய்து 131 450-ஐ அழைத்து, உங்களுடைய மொழி என்ன என்பதைச் சொல்லி, பாடசாலையை அழைக்குமாறு தொலைபேசி இயக்குனரைக் கேளுங்கள். உங்களுடைய உரையாடலில் உங்களுக்கு உதவுவதற்காக மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவரை தொலைபேசி இயக்குனர் இணைப்பிற்குக் கொண்டுவருவார். இந்த சேவைக்காக உங்களிடமிருந்து கட்டணம் அறவிடப்படாது.